செய்தி வெளியீடு **நாள்: 12.02.2026**

புழல், மகாலட்சுமி நகரில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டடம் இம்மாதம் 25ஆம் தேதிக்குள் கல்வி கற்கும் மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்கு அரப்பணிக்கப்படும்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (12.2.2026) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் புழல், மகாலட்சுமி நகர் **மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டடம்**, **எண்ணூர் சமுதாய நலக்கூடம் மற்றும் வணிக வளாக கடைகள்**, தண்டையார்பேட்டை **நவீன பேருந்து நிலையம்** மற்றும் மூலகொத்தளம் **சமுதாய நலக்கூடத்தின்** முன்னேற்றப் பணிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்ததாரர்கள் மற்றும் அலுவலர்களையும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

1967 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நடுநிலைப் பள்ளி, இந்தத் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் அண்ணன் திரு.சுதர்சனம் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** உத்தரவின்படி வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் நவீனமயமாக்கப்பட்ட புதிய பள்ளிக் கட்டிடத்தை வடிவமைத்திருக்கிறோம்.

இந்தக் கட்டிடம் ஏற்கனவே 623-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்காலிக கட்டிடங்களில் பயின்று வரும் சூழலில், அவர்கள் இந்த புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு படிக்க வரும் போது, அவர்களுடைய மனதில் மிகப்பெரிய உற்சாகமும் எழுச்சியும் உருவாகும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது ரூ.14 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் இந்த பள்ளிக் கட்டிடம், வரும் 25ஆம் தேதிக்குள் மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும். தனியார் பள்ளிகளுக்கு நிகரான தரத்தில் கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டிடப் பணிக்கு பெரிதும் ஒத்துழைப்பு வழங்கிய சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய அண்ணன் சுதர்சனம், எங்கள் துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்கள், உறுப்பினர் செயலர் திரு. பிரகாஷ் அவர்கள், பணிகளை மேற்பார்வை செய்த துறையின் கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜன்பாபு ஆகியோருக்கு துறையின் அமைச்சராகிய என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மட்டற்ற மகிழ்ச்சியையும் அடைகிறேன்.

இந்தக் கட்டிடத்தில் ஒரு ஹைடெக் ஆய்வகமும் (Hi-Tech Lab), ஒரு நூலகமும் இடம்பெற்றுள்ளன. மேலும், கூடுதல் வசதிகளை இந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் கோரியுள்ளார். அவற்றையும் உடனடியாக நிறைவேற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது. **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

Verified RealEstate™

இந்த ஆய்வுகளின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.சுதர்சனம், திரு.ஜே.ஜே.எபினேசர், திரு.ஐட்ரிம்ஸ் ஆர். மூர்த்தி, சிஎம்டிஏ உறுப்பினர்/முதன்மைச் செயலாளர் செயலர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, திருமதி.ஃபர்ஹத் பேகம், டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், சிஎம்டிஏ கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜன்பாபு, மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.நந்தகோபால், திரு.தனியரசு, திரு.நேதாஜி உ.கணேசன், திரு.பி.ஸ்ரீராமுலு, எம்டிசி பொது மேலாளர்கள் (இயக்கம்) திரு.நெடுஞ்செழியன், (வடக்கு) திரு.ராஜசேகர், மாமன்ற உறுப்பினர் திருமதி.கோமதி சந்தோஷ், உள்ளாட்சி பிரதிநிதி திரு.புழல் நாராயணன், பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி.ஜான்சிராணி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™